மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

அசல் வழக்கு எண். 117 / 2019

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14.12.2023ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.நாராயணசாமி | தொழில் | |
| த/பெ | சீனிவாச நாயுடு | ஊர் | |
| வயது | | தாலூக்கா | பல்லடம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

14.12.2023 வா.சா. 1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 26.09.2019 தேதியிட்ட சிறப்பு பொது அதிகார பத்திரம் அசல் வாதசாஆ.1

2. 19-11-1951 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வாதசாஆ.2

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ)